திமுக., அயலக அணி துணைச் செயலாளர் குமரி A.பாபு வினிபிரட் ஏற்பாட்டில்,

# குளச்சலில் முதல்வர் பிறந்தநாளையொட்டி மூத்த முன்னோடிகள் 73 பேருக்கு பொற்கிழிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலைஞர் நூலகத்தை துவக்கி வைத்து பொற்கிழிகள் வழங்கினார்!

நாகர்கோவில்,மார்ச்.9-

தி.மு.க. அயலக அணி துணை செயலாளர் குமரி A.பாபு வினிபிரட் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட குளச்சல் அண்ணா சிலை அருகில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கலைஞர் நூலகத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்ததுடன், தி.மு.க. முன்னோடிகளுக்கு 73 பேருக்கு பொற்கிழியும் வழங்கினார்.

“கலைஞர் நூலகம்” அறிவுக்கூடத்தையும் திறந்து வைத்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நினைவுப் பரிசாக வெள்ளி செங்கோல் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு, குமரி A.பாபு வினிபிரட் தலைமை தாங்க, அமைச்சர் மனோ தங்கராஜ், உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன், குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மேயர் மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

குளச்சலின் அதிநவீன கலைஞர் நூலகத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து நூலகத்தையும் புத்தகங்களையும் பார்வையிட்டார். நூலகத்தில் 10 லட்சம் மதிப்பிலான 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன, இந்நூலகத்தில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், போட்டி தேர்வுக்கு தயாராகும் வகையில் பல்வேறு புத்தகங்கள் இடம் பெற்றுள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாளையொட்டி விழா மேடையில் அமர வைக்கப்பட்டிருந்த 73 தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். தலா ரூ.10,000 வீதம் 73 முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்பட்டது.

பின்னர் துணை முதல்வர் அவர்களுக்கு அயலக அணி துணை செயலாளர் குமரி A.பாபு வினிபிரட் நினைவு பரிசாக வெள்ளியிலான செங்கோலை வழங்கினார்.

துணை முதல்வர் அவர்களின் வருகையடுத்து குளச்சல் நகரம் விழாக்கோலமாக, சாலையின் இருபுறங்களும் கட்சி கொடி, தோரணங்கள், வாழை குலை தோரணங்கள் கட்டப்பட்டு வண்ணக்கோலம் பூண்டு இருந்தது. இரவை பகலாக்கும் வகையில் மின் விளக்கு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தது.

துணை முதல்வர் அவர்களை வரவேற்கும் வகையில் குமரி A. பாபு வினிபிரட் ஏற்பாட்டில் பாரம்பரிய கலைக்குழுவினரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன, பொதுமக்கள் இந்நிகழ்ச்சியை காண வசதியாக எல்.இ.டி. டிவி வசதியும் செய்யப்பட்டு இருந்தது.

துணை முதல்வர் அவர்களை தொண்டர்கள், பொதுமக்கள் சாலை இருபுறமும் நீண்ட வரிசையில் இளம் தலைவர் அவர்களின் உருவம் பொறித்த பதாகைகளுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். செண்டை மேளம் முழங்க துணை முதல்வர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவ்விழாவில், தி.மு.க. இளைஞரணி மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பரகு, ஜி.பி.ராஜா மற்றும் ஹெலன்ரோஸ், பெனிலா மற்றும் தி.மு.க மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.





குளச்சலில், தி.மு.க. அயலக அணி துணை செயலாளர் குமரி A.பாபு வினிபிரட் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட அண்ணா சிலை அருகில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கலைஞர் நூலகத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து, தி.மு.க. முன்னோடிகளுக்கு 73 பேருக்கு பொற்கிழியும் வழங்கினார். இவ்விழாவிற்கு, குமரி A.பாபு வினிபிரட் தலைமை தாங்க, அமைச்சர் மனோ தங்கராஜ், உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன், குமரி கிழக்கு மாவட்ட செயலாள,ர் மேயர் மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில், தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர்கள் எஸ். ஜோயல், இன்பா ரகு, ஜி.பி.ராஜா மற்றும் ஹெலன்ரோஸ், பெனிலா, தி.மு.க மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




